# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க

# வெள்ளி விழா

## சிறப்புமலர்

## 1999

# I. M. T. C
# Silver Jubilee Souvenir

# உடுக்கடி கதையும் அதனுடன் தொடர்புடைய வேறு தகவல்களும்

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை



யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு பாரம்பரியங்களில் ஒன்றாக உடுக்கடி கதை இன்றும் விளங்குகிறது, உடுக்கு என்னும் வாத்தியத்தை வாசித்த வண்ணம் கதைப் பாடலை இனிமையுடன் உணர்ச்சி வெளிப் படப் பாடிக் கதை சொல்லும் மரபு நீண்ட காலமாகத் தமிழகத்திலும், ஈழத்திலும் இருந்து வருகிறது. இதுவே உடுக்கடி கதையெனக் கூறப்படுகிறது மட்டக்களப்பில் இதனை ''உடுக்குச் சிந்து'' என அழைக்கின்றனர் என்பர் வி.சி. கந்தையா. தமிழகத்தில் இதனை உடுக்கடிப் பாட்டெனக் கூறுகின்றனர் எனச் சொல்கின்றார் ஏ. என் பெருமாள். உடுக்குடன் தாளம், சப்பளாக் கட்டை முதலிய இசைக்கருவிகளையும் இசைப்பது வழக்கமாகும். நடிப்பும் வேடப் புனைவுமின்றிக் உடுக்கடித்துப் பாடுபவர் கதையை மிகவும் சுவைபடச் சொல்லிச் செல்வர். இவ்வுணர்வு பூர்வமான நிகழ்ச்சியை ஆயிரக்கணக்கான மக்கள் அக்காலத்தில் ஒன்று திரண்டு வந்து ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருப்பர் எனச் சொல்லப் படுகிறது. இன்று போல் திரைப்படங்களோ தொலைக் காட்சிகளோ, வேறு பொழுது போக்கு வசதிகளோ இல்லாத காரணத்தினால், அக்காலத்தில் உடுக்கடிக் கதையைச் சாதாரண பாமர மக்கள் பெரிதும் விரும்பிக் கேட்டு வந்தனர்

சமயத் தொடர்பான ஆடல்,பாடல்கள், கதைதழுவிய கூத்து வடிவங்களாகியமை போல உடுக்கடி கதைகளும் காலப் போக்கில் கூத்து வடிவங்களாகின. குறிப்பாக வட இலங்கையில் ஆடப்படும் 'காத்தவராயன் கூத்து, 'கோவலன் கூத்து' என்பன உடுக்கடி கதையிலிருந்தே பிறந்தன எனக் கொள்ள முடிகிறது.

கிராமப்புறங்களில் வாழும் மக்கள் இன்றுங்கூட, சின்னமுத்து பொக்குளிப்பான் போன்ற தொற்று நோய்கள் ஏற்பட்டால், அவை முத்துமாரி அம்மனால் ஏற்பட்டன என நம்புகின்றனர். முத்துமாரி அம்மனுக்குத் தாம் ஏதோ குறை செய்து விட்டதாகவும், அதனால்தான் அம்மன் இந்த நோய்களைப் பரப்பி விட்டதாகவும் நம்புகின்றனர். பாமர மக்களுடையே இன்றும் இந் நம்பிக்கையுடையோர். உள்ளனர் அதனால் அம்மனுக்குப் பொங்கிப்படைத்து குளுர்த்தி செய்விப்பது இன்றியமையாத சடங்கு எனவிசுவாசித்து அவ்வாறு செய்தும் வருகின்றனர். மிகவும் அண்மைக் காலம் வரை யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள மக்கள் காத்தவராயன் கூத்தை ஆடுவதன் மூலம் இந் நோய்களை நீக்கலாம் எனக் கருதி இக் கூத்தை அடிக்கடி ஆடுவித்தனர். இவ்வாறே பருத்தித்துறையில் உள்ள நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலிலும் பல்லாண்டு காலமாகக் கூத்துகளாடப்பட்டு வருகின்றன.

(தகவல்: வி. வி வைரமுத்து)

இவ்வாறு கூத்துகளாடப்படுவதற்கு முன்னர் வட இலங்கை எங்கும் மாரியம்மன் தாலாட்டு, உடுக்கடித்துப் பாடப்பட்டு வந்தது எனக்கொள்ள இடமுண்டு. ''மாரியம்மன் தாலாட்டு' மட்டுமன்றி, 'மாரியம்மன் கதை,' 'காத்தான் கதை' என்பனவும் உடுக்கடி கதைகளாக அம்மன் கோயில்கள் தோறும், தொற்று நோய்கள் ஏற்பட்ட காலங்களில் நடை பெற்று வந்தன. இதே போல 'கண்ணகி கதையும்' கண்ணகி அம்மன் கோயில்களிற் பாடப்பட்டு வந்தது என்பர் காரைநகர் சி. நாகமுத்து. இதனைப் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் உறுதி செய்கின்றார்.

''சில இடங்களில் காத்தவராய சுவாமியாக உருக்கொண்டாடுமொருவரை, மேலும் உருவேற்றும் பொருட்டு அல்லது உற்சாகப்படுத்தும் பொருட்டு உடுக்கடித்துப் பூசாரிமாராற் காத்தவராயன் பாடல்கள் பாடப்படுகின்றன. இங்கு இக்காத்தவராயன் பாடல்கள் முழுக்க முழுக்க ஒரு சமயச் சடங்காக நிகழ்த்தப்படுகின்றன. இன்றும் சில இடங்களில் கோவிற் சடங்கு வைபவங்களில் பலர் சூழ்ந்திருந்து கேட்க ஒருவரே உடுக்கடித்து தனியே தானே அபிநயித்துக் காத்தவராயன் பாடல்களைப் பாடிக் கதைவிளக்கமளிப்பதைக்காணலாம்,' என்பர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்.

அக்காலத்தில் வட இலங்கையில் வேளாண்மைக் காலங்களில் உடுக்கடித்துப் பாடி வந்திருக்கிறார்கள். பல பெரியார்களின் வீடுகளிலும் இரவு நேரங்களில் பொழுது போக்காக உடுக்கடி கதை நிகழ்த்தப்படுவது வழக்கமென்பர். கலையரசு சொர்ணலிங்கம்.

## உடுக்கடி வேலன்

காரைநகரில் உடுக்கடி வேலன் என்பவரின் பரம்பரையில் வந்த நாகமுத்து என்பவர் தங்களுடைய பரம்பரையினர் எவ்வாறு உடுக்கடி கதையைப் பேணி வந்தனர் என்றும் காலப் போக்கில் உடுக்கடி கதைகள் எவ்வாறு கூத்துகளாகின. என்றும் விபரமாகக் கூறியுள்ளார்.

காரைநகர் கிழக்கில் பிட்டியோலை என்னுமோர் இடமுண்டு. இங்கே 'ஆதியா வளவு' என்று அழைக்கப்படும் பெரியதொரு வளவு காணப்படுகிறது. இவ்வளவில் சொந்தக்காரராகவிருந்தவர் உடுக்கடிக் கலைஞராகிய நாகர் என்பவர். இவருடைய மகனே உடுக்கடி வேலன் என்பவர். உடுக்கடி வேலனின் மகன் சின்னப்பு மிசன் பாடசாலையொன்றில் ஆசிரியராகப் பணியாற்றியவர் இவர் மிகவும் சிறு வயதிலேயே மறைந்துவிட்டார். இவருடைய மகனே உடுக்கடி கதைபற்றிய அரிய தகவல்களைத் தந்த காரைநகர் நாகமுத்து ஆவர்.

நாகமுத்துவின் கருத்துப்படி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறிய தமது மூதாதையர் முதல் முதலிற் குடியேறிய காணியே ''ஆதியா'' வளவாகும். இது முதலில் 'ஆதியாள்வளவு' என்றே அழைக்கப்பட்டதாம். பின்னர் ஈறு கெட்டு ஆதியா வளவு என்று ஆகிவிட்டது. ஆதியாவளவு கலைவளர்த்த பெருமைக்குரியது. இந்த வளவில் எத்தனையோ உடுக்கடி கதைகளும் கூத்துக்களும், பள்ளு நாடகங்களும், நடைபெற்றதாக தமது பேரனார் உடுக்கடி வேலன் மூலம் தான் அறிந்ததாக நாகமுத்து கூறுவர். உடுக்கடி வேலன் உடுக்கடி கதை சொல்வதில் மட்டுமன்றி, சோதிடத்திலும், விஷகடி வைத்தியத்திலும், மாந்திரீகத்திலும் கைதேர்ந்தவர். இவர் 1864 ஆம் ஆண்டு பிறந்தவர். 1953 ஆம் ஆண்டு தமது 89 ஆம் வயதில் காலமாகியவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் உடுக்கடித்துக் கதை சொல்லும் பிரபலமான கலைஞராக இவர் விளங்கினார். இவருடைய காலப்பகுதியில் வேறும் பல உடுக்கடி கலைஞர்கள் கலைச் சேவை புரிந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் குருவாகவும், முன்னோடியாகவும் உடுக்கடி வேலன் விளங்கியிருக்கிறார் எனச் சொல்லப்படுகிறது.

உடுக்கடிக் கலைஞர்கள் கிராமம் கிராமமாகச் சென்று உடுக்கடித்துக் கதை சொல்லி வந்துள்ளனர். கோயில் விழாக்க ளின் போதும், பண்டிகைகளின் போதும், திருமண வைபவங்களின் போதும், இக் கலைஞர்கள் உடுக்கடித்துக் கதை சொல்லி வந்தனர். உடுக்கடி வேலன் யாழ்ப்பாணத் தில் மட்டுமன்றி, வன்னிப் பிரதேசத்திலும், தென்னமரவடி, திருகோணமலை ஆகிய கிழக்குப் பிரதேசத்திலும் உடுக்கடித்துக் கலைப் பணியாற்றியதாகச் கூறப்படுகிறது.

(தகவல்: இ. திருமேனி)

## இந்தியக் கலைஞர்கள்

உடுக்கடி வேலன் சிறுவனாக இருந்த காலத்திருந்தே இந்தியக் கலைஞர்கள் வட இலங்கைக்கு வந்து கோயில் திருவிழாக் களின் போது கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்து வதுண்டு. பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் கோயில் விழாக்களின் போது நடனமாடி வந்ததாக சொல்லப்படுகிறது. இக் கலை ஞர்கள் தனி நடனங்களை மட்டுமன்றி கதை தழுவிய கூத்துகளையும் ஆடிவந்ததாக உடுக்கடி வேலனிடமிருந்து தான் அறிந்து கொண்டதாக நாகமுத்து கூறுகின்றார்.

மலையாளத்திலிருந்து வந்த கலைஞர் களுட் சிலபேர் மந்திரவாதிகளாகவும் இருந் திருக்கிறார்கள். இவர்கள் பேய் பிசாசு பிடித்தவர்கள் என்று நம்பப்பட்டவர்க ளுக்கு மாந்திரீக மூலம் வைத்தியம் செய் திருக்கிறார்கள். இவ் வைத்தியத்தின் ஓர் அங்கமாக உடுக்கடித்துக் குறிப்பிட்ட தேவ தைகளைப் பாடி அழைப்பது வழக்கம். இவ் வழக்கம் இன்றுவரை பாமர மக்களிடையே காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் உடுக் கடியாகிய கலை வளர்ச்சிக்கு மந்திரவாதி களின் பங்களிப்பும் இருந்திருக்கிறது எனக் கொள்ளக்கிடக்கின்றது.

## உடுக்கடி கதையும் கூத்துகளின் தோற்றமும்

அம்மானைப் பாடல்களும், உடுக்கடி பாடல்களுமே காலப்போக்கில் கூத்து வடி வம் பெற்றன. காத்தவராய சுவாமிமீது பாடப்பெற்ற பாடல்களும், கண்ணகி அம் மன்மீது பாடப்பெற்ற பாடல்களும், மாயு யம்மன் மீதுபாடப்பெற்ற பாடல்களும் காத் தவராயன் கூத்தாகவும், கோவலன் கூத்தாக வும்மூகி ழ்க்கத்தொடங்கின். உடுக்கடி வேலன் உடுக்கடித்துக் கதை சொல்வதோடு நின்று விடாது கூத்துகளுமாடி வந்திருக்கின்றார். இவர் காலத்தில் நடிகர்கள் 'வேடமுகங்கள்' (MASK) அணிந்து கூத்தாடியுள்ளனர். மரத் தால் வேடமுகங்கள் செய்யும் கலைஞர்கள் சிலர் அக்காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த னர் என அறியமுடிகிறது. வேடமுகங்கள் அணிவதன் மூலம் பாத்திரங்களைத் தெளி வாகக் காட்டமுடிந்தது. வயோதிபர்களும் இளம் பாத்திரங்களையேற்று நடிக்கக் கூடி யதாகவிருந்தது. ஆண்கள், பெண் பாத்தி ரம் ஏற்று நடிக்கத்துணைபுரிந்தது. வேட முகங்கள் எப்பொழுது கைவிடப்பட்டன என்பது தெரியவில்லை.

## கதை வேறுபாடு

வட இலங்கையில் ஆடப்படும் காத்த வராயன் கூத்துக் கதைக்கும் தமிழகத்தில் ஆடப்படும் காத்தவராய சுவாமிக் கூத்துக் கதைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. வானமாமலை பதிப்பித்த காத்தவராயன் கதைப்பாடல் எனும் நூலில் (1971) வேறு விதமாகக் கதை அமைத்துள்ளது. இவ் வேறுபாட்டை உடுக்கடி கதையிலும் அவ தானிக்க முடிகின்றது.

ஈழத்துக் காத்தவராயன் கூத்தில், காத்தவராயன் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் சக்தி மகனாக அவதரித்து, முத்துமாரி அம் மனால் வளர்க்கப்பட்டவனாக காட்டப் பெறுகின்றான். (காத்தவராயன் நாடகம் 1986: 58–59) தென்னகத்தில் ஆடப்படும் காத்தமுத்து நாடகத்தின்படி சிவசுப்பிர மணியரே காத்தவராய சுவாமியாக அவ தாரமெடுத்து உமையம்மையின் நந்தவனத் தைக் காவல் செய்வதாகச் சொல்லப்படுகி றது. (காத்தமுத்து நாடகம்: 1975: 16) காத்தவராயன் கதைப்பாடலின்படி காத்த வராயன் முற்பிறப்பில் தேவனாக இருந்த

போது ஆறு தேவமாதரைக் காதலித்த காரணத்தால் சிவனின் கோபத்துக்கு ஆளாகி தாழ்ந்த சாதியில் பூமியில் பிறந்து பிராமணப் பெண்ணொருத்தியை மணக்கின்றான். பிராமணப் பெண்ணை மணந்த குற்றத்துக்காகக் கழுவேறி மடிகின்றான். பின்னர் மக்களாற் கடவுளாகப் போற்றப்பட்டு வழிபாட்டுக் குரியவனாகின்றான். (காத்தவராயன் பாடல்: 1971) யாழ்ப்பாணத்து உடுக்கடி கதைப் பாடலில் மேற்படி வரலாறு காணப்படவில்லை.

## கண்ணகி கதையும் உடுக்கடி கதையும்

யாழ்ப்பாணத்தில் கண்ணகி அம்மன் கோயில்கள் தோறும் கண்ணகி கதை, உடுக்கடி கதையாகப் பாடப்பட்டு வந்துள்ளமை முன்னரே கூறப்பட்டது. நவாலி, சுட்டிபுரம், நுணாவில், புங்குடுதீவு, காரைநகர் ஆகிய இடங்களில் உள்ள கண்ணகி அம்மன் கோயில்கள் தோறும் கண்ணகி கோவலன் கதையைக் கூறும் 'கண்ணகி காதை' உடுக்கடிக் கதையாகப் பாடப்பட்டு 'வந்துள்ளது.. நவாலி வடக்கில் உள்ள கண்ணகி அம்மன் கோவில், முன்னர் கண்ணகி கதை தொடர்ந்து படிக்கப்பட்டு வந்துள்ளது. 1930 ஆம் ஆண்டளவிலிருந்து, உடுக்கடி கதையுடன், கண்ணகி வரலாறு கூத்தாகவும் ஆடப்பட்டு வந்தது. உடுக்கடி கதையிற் பாடப்பட்ட பாடல்களையே பாடி நடிகர்கள் ஆடி வந்தனர். இப்பாடல்கள் காத்தவராயன் கூத்து மெட்டிலேயே, அதாவது 'கதைவழிக் கூத்து' மெட்டிலேயே பாடியாடப்பட்டன. உதாரணமாக கண்ணகியை எங்கே அடைக்கலமாக வைக்கலாம் எனக் கோவலன் கவலையுடன் பாடுவதாக அமைந்த பாடலை நோக்கலாம்:

யார் வீடு தேடிடட்டோ—
எந்தன் ஆரணங்கே உன்னை வைக்க
செட்டி வீடு தேடிடட்டோ—
என்தன் சேயிழையே உன்னை வைக்க
தட்டா வீடு தேடிடட்டோ—
எந்தன் தையலரே உன்னை வைக்க

இப்பொழுது இங்கே உடுக்கடி கதையும் நடைபெறுவதில்லை. கூத்தும் நடைபெறுவதில்லையெனத் தெரிகிறது.

(தகவல்: நவாலி என். சி. முருகேசு)

## சுட்டிபுரமும் கண்ணகி கதையும்

சுட்டிபுரம் கண்ணகி அம்மன் கோவிலில் கண்ணகி காதை தொடர்ந்து படிக்கப்பட்டு வந்தது. திருவிழாக்களின் போது 'கண்ணகி' கூத்துமாடப்பட்டு வந்தது. இசை நாடகங்களாகவும் கண்ணகி வரலாறு ஆடப்பட்டது. இப்பொழுது நாட்டுச் சூழ்நிலை காரணமாக இவை கைவிடப்பட்டு விட்டன.

நுணாவில் கண்ணகி அம்மன் கோவிலிலும் கண்ணகி கதையை மிகவும் பக்தி சிரத்தையுடன் உடுக்கடித்துப் பாடி வந்துள்ளனர். கூத்தாகவும் ஆடி வந்தனர். இப்பொழுது கண்ணகி கதை மட்டும் பாடப்பட்டுவருகிறது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் முல்லைத்தீவு பிரதேசத்தில் உள்ளது. வட இலங்கையிற் பிரசித்தி பெற்ற கண்ணகி அம்மன் கோயில்களில் ஒன்றாக இது உள்ளது. இங்கேயும் 'கண்ணகி கதை' உடுக்கடி கதையாகவும் கூத்தாகவும் நீண்ட காலமாக பாடப்பட்டும். ஆடப்பட்டும் வரக் காணலாம்.

(தகவல்: ஆசிரிய திலகம் க. முருகேசு)

## கண்ணகி வழிபாடும் நாவலரும்

வட இலங்கை முழுவதிலுமிருந்த கண்ணகி அம்மன் கோயில்கள் தோறும், கண்ணகியின் வரலாறு நீண்ட காலமாகப் பாடப்பட்டு வந்தது என நோக்கினோம். கண்ணகி வழிபாடும் உயிர்த் துடிப்புடன் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்தது. இவ்வழிபாடு காலக்கிரமத்தில் ஓரளவு குறையத் தொடங்கியது. இதற்கு ஆறுமுக நாவலரே காரணம் எனத் தெரிகிறது. நாவலர் கண்ணகி வழிபாட்டை விரும்பவில்லை. கண்ணகி ஒரு மானிடப் பெண். அதாவது ஒருசெட்டிப் பெண். அவளை வணங்க் கூடாது என்பது

அவருடைய கருத்தாகும். இதனை அவர் எழுதிய கட்டுரைகளிலிருந்து அறிய முடிகிறது.

(நாவலர் பிரபந்தத் திரட்டு 1967 : 68)

நாவலரால் தூண்டப்பட்ட பலர் கண்ணகி வழிபாட்டைக் கைவிடலாயினர். கண்ணகி அம்மன் கோயில்களையும் முத்துமாரி அம்மன் கோயில்களாக மாற்றிவிட்டனர். உதாரணமாக, அல்வாய் முத்துமாரி அம்மன் கோயில், காரைநகர் பாலாவோடை முத்துமாரி அம்மன் கோயில் என்பன முன்னர் கண்ணகி அம்மன் கோயில்களாகவே இருந்தன எனச் சொல்லப்படுகிறது. இதனால் தான் கண்ணகி கதையை உடுக்கடித்துப் பாடும் மரபு படிப்படியாக மறையத் தொடங்கியது. ஆனால் காத்தவராயன் கதைப்பாடலும், மாரியம்மன் கதைப் பாடலும் இன்று வரை உயிர்த் துடிப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

## கண்ணகியும் பத்தினித் தெய்வமும்

தமிழ் மக்களிடையே உள்ள கண்ணகி வாழிபாடு சிங்கள மக்கள் மத்தியில் இன்றும் பத்தினித் தெய்வ வழிபாடாக நிலவி வருகிறது. பத்தினித்தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையனவாக சத் பத்தினி வழிபாடு, கிரி அம்மாமார் வழிபாடு என்பனவுள்ளன. மேற்படி வழிபடுாகள் மட்டுமன்றி ரத்னாவளி வழிபாடு (Raghavan 1967: 130 –131)அமராவதி வழிபாடு (Obeysekera 1994:300 என்பனவும் பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடையனவாகவுள்ளன. கண்ணகி வழக்குரை, கோவலன் கதை என்பன உடுக்கடி கதைகளாக ஈழத்து இந்துக்களிடையே நிலவி வருவது போல பௌத்த சிங்கள மக்களிடையே சத் பத்தினி கவி (Obeysekera 1984: 121–127 ) ரத்னா வளி கவி (Raghavan 1967: 130 – 131 ) என்பன பத்தினி வழிபாட்டின்டி போது பாடப்பட்டும், ஆடப்பட்டும் வருகின்றன. சொக்கறி எனும் சிங்களக் கூத்தும் பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறதென்பர். பேராசிரியர் சரச்சந்திரா (1964 : 84) சொக்கறி நாடகப்பாடல் மெட்டுக்கள் சில, யாழ்ப்பாணத்து உடுக்கடி பாடல் மெட்டுகளுடன் ஒத்திருக்கக் காணலாம்.

தமிழகத்திலாடப்படும் கோவலன் நாடகத்திலும், ஈழத்திலாடப்படும் நாட்டார் கூத்திலும், கண்ணகி காளியின் அவதாரமாகச் சொல்லப்படுகின்றாள். இளங்கோவடிகள் படைத்த கண்ணகிக்கும் கூத்துக்களில் வரும் கண்ணகிக்கும் நிறைய வேறுபாடுண்டு, உடுக்கடி கதையிலும் இவ் வேறுபாட்டைக் காண முடிகிறது.

ரத்னாவளி கவியில், ரத்னாவளி பத்தினித் தெய்வத்தைப் போன்றவளாக வருணிக்கப்படும் அதே வேளையில் காளிதேவியை ஒத்தவளாகவும் விபரிக்கப்படுகிறாள். இவ்வருணனை கேரளத்தில் வணங்கப்படும் பகவதியை ஒத்ததாகவும் உள்ளதென்பர் ராகவன். (1967 : 131) யாழ்ப்பாணத்தில் பாடப்படும் உடுக்கடி கதையில் வரும் கண்ணகியின் பண்பியல்புகளுக்கும், ரத்னாவளியின் பண்பியல்புகளும் நிறைய ஒற்றுமை காணப்படுகிறது.

தொற்று நோய்களிலிருந்து காக்கும் தெய்வமாக வட இலங்கையில் மாரியம்மனும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் பத்தினித் தெய்வமும் (Gooneti'leka :1976: 06 ) கேரளத்தில் காளி, பகவதி ஆகிய தெய்வங்களும் (Achyuta Menon 1936 : 235 – 236) வணங்கப்படுகின்றன. மேலும் கேரளத்தில் மாரியம்மன், ஸ்ரீ குறும்பா, வைசூரிமாலா ஆகிய தேவதைகள் நோய்களைப் பரப்பும் தெய்வங்களாகவும், குணப்படுத்தும் தெய்வங்களாகவும் வணங்கப்படுகின்றனவென்பர் குறுப் (Kurup 1977:31) மாரியம்மன் வழிபாடு, பத்தினி வழிபாடு, பகவதி அல்லது காளி வழிபாடு ஆகிய யாவற்றிலும் உடுக்குடன் கூடிய ஆடல் பாடல் என்பன முக்கியமாக இடம்பெறும் ஒருமைப்பாட்டினைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேநாட்டு மரபில் கூத்து என்பது முதலின் ஆட்டத்தின் வழியாக கதை என்பதைச் சித்திரித்தலாகும். பின்னர் ஆட்டம் மறைய அது வெறுங் கதையாகவே மாறுவதைக் காணலாம். சங்க இலக்கியங்களில் விறலியர் பாணர்கள் கதையைப் பாடிக் காட்டிய மரபு ஒன்று உள்ளார்ந்து நிற்பதைக் காணலாம் என்பர் பேராசிரியர் சிவத்தம்பி (1981 : 195)

உடுக்கடி கதையை நோக்கும் போது முதலில் ஆட்டமும், அதன்வழி கதை சொல்லும் மரபும் தோன்றியிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. தெய்வமேறி உருவாடுவதும், அடியவர்கள் அத் தெய்வத்தைப் போற்றிப் பாடுவதும், தெய்வத்தின் வரலாற்றைப் பாடுவதும் உடுக்கடி கதையின் ஆரம்பமாகும். காலப்போக்கில் ஆடல் மறையக் கதை சொல்லும் மரபு வளர்ச்சி பெறலாயிற்று. மேலும் சிறிது காலஞ் செல்லக் கதை சொல்லும் மரபிலிருந்து நாடகம் மலரத் தொடங்கலாயிற்று எனக் கொள்ளலாம். ஆகவே நாடகத்தின் தோற்றத்திற்கு உடுக்கடி கதையும் ஓர் ஊற்றுக்காலாக உள்ளது என்பது தெரிய வருகிறது.

## இக்கட்டுரை எழுத உதவிய நூல்கள்


ஆறுமுக நாவலர் பிரபந்தத்திரட்டு — சென்னை ( 1964 )

கண்ணகி வழக்குரை — வி. சி. கந்தையா பதிப்பு காரைதீவு மட்டக்களப்பு ( 1968 )

காத்தமுத்து நாடகம் — சென்னை ( 1975 )

காத்தவராயன் கதைப் பாடல் — வானமாமலை பதிப்பு சென்னை ( 1975 )

காத்தவராய சுவாமி கதை — வானமாமலை பதிப்பு சென்னை, ( 1986 )

காத்தவராயன் நாடகம் — இ. பாலசுந்தரம் பதிப்பு, யாழ்ப்பாணம் ( 1986 )

தமிழியற் சிந்தனைகள் — வித்தியானந்தன். சு. யாழ்ப்பாணம் (1979)

தமிழ் நாடக வரலாறு — பெருமாள் சக்தி மதுரை– 18, ( 1979 )

மட்டக்களப்புத் தமிழகம் — கந்தையா வி. சி. யாழ்ப்பாணம்( 1964 )

A note on Kali or Bagawathi Cult in Kerala — Achyutha menon, Madras ( 1936 )

Drama in Ancient Tamil Society — Sivathamby K. Madras ( 1981 )

Nadagama — Goonatilleka, Delhi (1984)

Sinhala Natum — Raghavan M. D Colomdo ( 1964 )

The Cult of the Goddess Pathini — Odeysekera G London ( 1967 )


## நேர்முகம் காணப்பட்டோர்

| | |
|---|---|
| நாகமுத்து. சி. | காரைநகர் |
| திருமேனி. இ. | கும்புறுபிட்டி |
| முருகேசு என். சி | நவாலி |
| முருகேசு க. | அல்வாய் |
| வைரமுத்து வி. வி. | நடிகமணி காங்கேசந்துறை |